DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.4/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Savithiri | Caste | : |
| Husband Name | : Krishnan | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 65 |
| Time | : | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **01.06.2026**

**01.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது குன்னூர் மேல்பஜாரில் குடியிருந்து மக்காச் சோளம் மற்றும் ஸ்வீட் கார்ன் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் வீடு மவுண்ட் ரோட்டில் நீலகிரி லேப் சந்தில் உள்ளது. அந்த சந்திற்கு அருகில் மூர்த்தி மெடிக்கல்க்கு முன்பு நான் சோளம் விற்பனை செய்து வந்தேன். எதிரி ரேஷன் அரிசியை விற்பனை செய்யும் விவரம் அங்குள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும். அவர் ரேஷன் அரிசி விற்பனை செய்வது குறித்து யாரோ தகவல் சொல்லி எதிரியை 2025ம் வருடம் மாதம் தெரியவில்லை, 9ம் தேதி அதிகாரிகள் பிடித்துக்கொண்டார்கள்.

2. நான் தான் எதிரி ரேசன் அரிசி விற்பனை செய்யும் விவரத்தை அதிகாரிகளிடம் கூறிவிட்டேன் என எதிரி மற்றவர்களிடம் கூறி வந்துகொண்டிருந்தார். 2025ம் வருடம் அதே மாதம் 10ம் தேதியில் மாலை 6 மணிக்கு மேல் நான் உட்கார்ந்து சோளம் விற்பனை செய்து கொண்டிருந்த போது எதிரி எங்கிருந்தோ வந்து என்னை கையால் படார் படார் என அடித்தார், கெட்ட கெட்ட வார்த்தையால் என்னை திட்டினார். நான் எதிரி அடிப்பதை எனது கைகளால் தடுத்தேன். அவ்வாறு தடுக்கையில் எனது வலது கையின் சுண்டுவிரலை எதிரி நறுநறு என வாயில் வைத்து கடித்தார். அவ்வாறு எதிரி

எனது விரலை கடித்ததில் எனது விரலுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது மகள் தீபாவும் வேலை முடித்து என்னுடன் தான் இருந்தார். எனது மகள் என்னை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை உள்நோயாளியாக சிகிச்சையில் சேருமாறு மருத்துவர் அறிவுறுத்தினார். ஆனால் எனது ஒரே மகள் வீட்டில் உள்ளோரை கவனிக்க இயலாது என நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற மறுத்துவிட்டேன். மறுநாள் காவல் நிலையத்திற்கு எனது மகளுடன் சென்று புகார் கொடுத்தேன். எனது மகள் தான் புகார் மனுவை எழுதினார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்பொழுதும் எதிரி கடித்த விரல்கள் சரியாக இயங்குவதில்லை என்பதால் வேலை செய்ய முடியவில்லை. எதிரி என்னை கொன்றுவிடுவேன் என மிரட்டினார். அதனால் எனக்கு பயம் ஏற்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் சோளத்தை கூடையில் போட்டு தரையில் உட்கார்ந்து தான் விற்பனை செய்வேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் மாலை நேரம் என்பதால் அந்த இடத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சம்பவத்திற்கு பின்பு தான் கூட்டம் அதிகமாக வந்தார்கள். எனது கடைக்கு அருகில் ஆட்டோ ஸ்டான்ட் உள்ளது என்றால் சரிதான். நான் கடை வைத்துள்ள பகுதி மார்கெட்டின் நுழைவுவாயில் என்றால் சரிதான். நான் கடை வைத்துள்ள இடத்திற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 500 அடி இருக்கும் என்றால் அவ்வளவு இருக்காது.

2. எதிரியின் வீட்டிற்கு அருகிலுள்ள நீலகிரி லேப்பிற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் டீக்கடை ஒன்றும், முடிவெட்டும் கடை ஒன்றும் உள்ளது. அதே பகுதியில் தைல கடை ஒன்று உள்ளது என்றால் அது அந்த

பக்கமாக உள்ள ஒரு வீடு ஆகும். அதே போல் பேக்கரி அடுப்பு உள்ளது என்றால் அந்த சந்தில் தான் உள்ளது. அ.சா.ஆ.1ல் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது மகள் தான் நான் சொல்லச்சொல்ல எழுதினார். அந்த புகாரில் ரேசன் கடை அதிகாரிகள் வந்தது குறித்து கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. எத்தனை அதிகாரிகள் எதிரி வீட்டிற்கு வந்தார்கள் என எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரில் எனக்கும் எதிரிக்கும் அடிக்கடி பிரச்சனை இருந்தது என கூறியுள்ளேனா என்றால் நான் யாரிடமும் பிரச்சனை செய்வதில்லை என்பதால் புகாரில் கூறவில்லை. எனது மகள் அரசு மருத்துவமனையில் பணிபுரிகிறார் என்றால் தற்காலிக பணியாளராக பணிபுரிகிறார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு எவ்வாறு சென்றேன் என புகாரில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது, சம்பவம் முடிந்தவுடன் நான் மயங்கிவிட்டேன்.

4. எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே இருந்த பிரச்சனை காரணமாக நான் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்தவொரு கெட்ட வார்த்தையோ பேசவில்லை என்றும், எதிரி எனது கையை கடிக்கவோ இல்லை என்றால் சரியல்ல. அதே போல் சம்பவயிடத்தில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.